REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2021 ஜனவரி 9 சனிக்கிழமை

வரு. 89 இல. 08 | January 09,Saturday, 2021 | 16பக்கங்கள் | 30/-

## SLFPக்கு இப்போதும் நானே தலைவி

### சந்திரிகா அதிரடி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இப்போதும்தாமேதலைவரென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா 06

தற்போதுள்ள சட்டங்கள், விதிமுறைகள்;

## பொதுமக்கள் நலனை ஆராய்வதற்கு ஜனாதிபதியால் புதிய ஆணைக்குழு

### லலித் வீரதுங்க,பாலேந்திரா கொண்ட 18 பேர் குழுவில்

பொது மக்கள் நலனை நோக்கமாகக் கொண்டு, தற்போதுள்ள சட்டங்களையும் விதிகளையும் எளிமைப்படுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் 18 பேர் கொண்ட ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார்.



இந்த ஆணைக்குழுவின் இணைத் தலைவர்களாக முன்னாள் ஜனாதிபதியின் செயலாளரும் ஜனாதிபதியின் தலைமை ஆலோசகருமான லலித் வீரதுங்க மற்றும் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் கிரிஷான் பாலேந்திரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆணைக்குழுவின் செயலாளராக 06

சுகாதார வழிகாட்டல்களுக்கமைய

## தனியார் வகுப்புகள் ஜன.25 முதல் ஆரம்பம்

### சஜித்தின் கேள்விக்கு ஜீ.எல்.பீரிஸ் பதில்

**சம்ஷ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



சுகாதார வழிகாட்டல்களுக்கமைய எதிர்வரும் ஜனவரி 25ஆம் திகதி முதல் தனியார் வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் 06

## சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி உற்பத்தியாளர்களுக்கு கடன் வசதிகள்

### வழங்க அரசு நடவடிக்கை என்கிறார் பிரதமர் மஹிந்த

சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி உற்பத்தியாளர்களுக்கு கடன் வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ (07) ஆலோசனை வழங்கியுள்ளார்.




அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் பாராளுமன்ற குழு அறை 02 இல் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாரியளவிலான அரிசி உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளுக்கு முன்னர் சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். நாட்டில் காணப்படும் உத்தரவாத நெல் விலைக்கு ஏற்ப பெப்ரவரி 01ஆம் திகதி 06

கொரோனாவால் வெளிநாட்டில் சிக்

## ஜனவரி 22 முத
## விமானத்தில்




### எதிரணியினரின் கேள்விக்கு நேற்று சபையில் நிமல் லான்சா



**சம்ஷ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

ஜனவரி 22ஆம் திகதி முதல் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் விரும்பிய விமானங்கள் மூலம் இலங்கைக்கு வரக்கூடிய வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்குமென இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை வெளிநாடுகளில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையரை நாட்டுக்கு அழைத்து வரும் வேலைத்திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

**இதுவரை சுமார் 70,000 பேரை அழைத்து வந்துள்ளதாக தகவல்**

வெளிநாடுகளிலுள்ள இலங்கையரை அழைத்து வருவதில் அரசாங்கம் அனைவரையும் இலவசமாக அழைத்து வரவே தீர்மானத்தை எடுத்திருந்தது. இப்போது வரையில் 70,000 பேர் வரை அழைத்து வரப்பட்டுள்ளதுடன் அவர்களில் 68,000 பேர் வரையானோர் இங்கு வந்த பின்னர் இலவசமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சிலர் ஹோட்டல்களில் தனிமைப்படுத்தலுக்கு இணக்கம் வெளியிட்டனர். 06

## அமரர் SWRD பண்டாரநாயக்கவின் 122 ஆவது ஜனன தினம் நேற்று



முன்னாள் பிரதமர் மறைந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் 122 ஆவது ஜனனதினம் நேற்று காலிமுகத்திடலிலுள்ள அமரர் பண்டாரநாயக்கவின் உருவச்சிலைக்கு முன்பாக நினைவு கூரப்பட்டது.

இந் நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் சுனேத்ரா பண்டாரநாயக்க ஆகியோர் முதலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். அத்துடன் இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அமரர் பண்டாரநாயக்கவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

## இலங்கை உள்நாட்டு விவகாரங்களில் இந்தியாவுக்கு தலையிட முடியாது

### யோசனைகளை முன்வைக்கலாம்

இலங்கை சுயாதீனமான நாடு என்ற ரீதியில் இந்தியா இலங்கைக்கு யோசனைகளை மாத்திரமே முன்வைக்க முடியுமே தவிர உத்தரவிட முடியதென இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.



கொழும்பில் (07) நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் சரத்வீரசேகர மேலும் கூறியுள்ளதாவது,

தேசிய சொத்துக்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டினருக்கு விற்பனை செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

ஆகவே தேசிய சொத்துக்கள் ஏனைய தரப்பினருக்கு விற்பனை செய்யப்படுவதாக முன்வைக்கப்படும் கருத்துக்கள் குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. தேசிய சொத்துக்களை 06

## இலங்கையரை அழைத்து வருவதில் எந்த விதமான மோசடியும் இல்லை

### அவ்வாறு நடந்திருந்தால் நடவடிக்கை - நாமல்

**சம்ஸ் பாஹிம், சுப்ரமணியம் நிஷாந்தன்**

வெளிநாட்டிலுள்ள இலங்கையரை அழைத்து வருவதில் எந்த மோசடியும் இடம்பெறவில்லை. அவ்வாறு நடந்திருந்தால் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். வெளிநாடுகளிலுள்ள இலங்கையரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அடுத்த வாரம் முதல் கூடுதலான விமானங்களை ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதெனவும் அவர் கூறினார்.



பாராளுமன்றத்தில் நேற்று எதிர்தரப்பு முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த அவர், மேலும் கூறுகையில்,

வெளிநாட்டிலுள்ள இலங்கையரை அழைத்து வருவது குறித்து நாம் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை 06

## வாக்காளர் இடாப்பில் உங்கள் பெயர் உள்ளதா?

### உறுதிப்படுத்துமாறு ஆணைக்குழு கோரல்





2020 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் தேருநர் ஒருவராக பதிவு செய்துகொள்வதற்காக சிபாரிசு செய்துள்ள நபர்களின் பெயர்களை www.elections.gov.lk என்ற இணையத்தளத்தில் பரீட்சித்துக்கொள்ள முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாரேனும் ஒருவரின் பெயர் அவ்விடாப்பில் 06

## சிரச நிறுவனத்திற்கு எதிரான தடை நீடிப்பு

### ஜனவரி 13 வரை தொடர பணிப்பு



எரிப்பதா? புதைப்பதா? விவாதம் வேண்டாம்;

## தொற்றிலிருந்து மக்களை பாதுகாப்பது பற்றி சிந்திப்போம்

### பாராளுமன்றத்தில் அமைச்சர் உதய கம்மன்பில

## தன்னைப்பற்றி அமைச்சர் விமல் பொய்யான குற்றச்சாட்டு

### ஜனாதிபதி ஆணைக்குழுவில் ரிஷாட் எம்.பி முறைப்பாடு



## மாத்தளை நகர முதல்வரான தமிழர் சந்தனம் பிரகாஷிற்கு இராதா வாழ்த்து

**நுவரெலியா தினகரன் நிருபர்**



